## In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 10/2020** **Date:25.10.2025**

**(PW2)- அருள்ராஜ்**

**1** ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. கத்தோலிக்க திருச்சபையை பொறுத்து ஆலயங்கள் ஜெபக்கூடம், ஆலயம், மெட்டாசன ஆலயம் , திருத்தலம், பெருங்கோவில் என 5 வகையாக வழிப்பாடு நடத்தும் இடததை பிரித்துள்ளார்கள் என்றால் எனக்கு 2 அல்லது 3 வகை தான் தெரியும். கத்தோலிக்க திருச்சபையின் உறுப்பினராக இருந்தும் எத்தனை வகையான வழிபாட்டு தலங்கள் வகைபாடு செய்துள்ளன என்ற விவரம் தெரியாது என்றால் எனக்கு தெரிந்தவரை 2 அல்லது 3 வகை தான் உள்ளது. சித்தன்தோப்பு துாய அலங்கார அன்னை ஆலயம் மேற்படி வகைப்பாடுகளில் ஆலயத்தில் சேர்ந்தது என்றால் சரிதான்.

2. மறைமாவட்டங்களில் மிக முக்கியமான பகுதிகளில் ஜெபக்கூடம் வைத்திருப்பார்கள் அது போல் குழித்துறை மாவட்டத்தில் உள்ளதா என்றால் ஜெபக்கூடம் கிடையாது, கெபி, சிறிய குருசடிகள் இருக்கிறது, அதில் மக்கள் வழிபாடு செய்வார்கள். கோட்டாறு மறைமாவட்டத்தின் மெட்டாசன ஆலயம் கோட்டாறு சவேரியார் கோவில் ஆலயம் என்றால் சரிதான். குழித்துறை மறைமாவட்டத்தின் மெட்டாசன ஆலயம் திருத்துவபுரம் ஆலயம் என்றால் சரிதான் , அதை திருத்துவபுரம் பேராலயம் என்றும் அழைப்பார்கள் .

3. சுங்கான்கடை, புலியூர் குறிச்சி ஆலயங்களை திருத்தலங்கள் என்று அழைப்பார்கள் என்றால் சரிதான். வேளாங்கண்ணி முதலிய கோவில்களை பெருங்கோவில்கள் என்று அழைப்பார்கள் என்றால் சரியல்ல, பேராலயம் என்று அழைப்பார்கள். பெருங்கோவில் என்று ஒரு பிரிவு உண்டு என்றாலும் வேளாங்கண்ணி போன்ற ஸ்தலங்களை பெருங்கோவில் என்று அழைப்பார்கள் என்றாலும் அது பெருஙகோவில் என்று பதிவு செய்யப்பட்டது என்றால் அது பறறி தெரியாது, பேராலயம் என்று தான் அழைப்பார்கள்.

4. நான் பேராலயம் என்று அழைப்பர்கள் என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. சித்தன்தோப்பு துாய அலங்கார அன்னை

ஆலயம் கண்டன் விளை துாய குழந்தை இயேசு தெரசா ஆலயத்தின் கிளை பங்கு என்றால் சரிதான். சித்தன்தோப்பிலிருந்து சுமார் 7 கிலோ மீட்டர் தொலைவில் சுங்கான் கடையில் துாய அந்தோணியார் திருத்தலமும், புலியூர் குறிச்சி திருத்தலமும் அமைந்துள்ளது என்றால் சரிதான். குழித்துறை மறை மாவட்டம் குழித்துறை அமைப்பு சட்டத்தின் படியும் திருச்சபை சட்டத்தின் படியும் தான் இயங்கி வருகிறது என்றால் சரிதான், ஆனால் சட்டங்கள் கிடையாது.

5. என்னிடம் காட்டப்படும் புத்தகம் மேற்படி மறைமாவட்டத்தின் சட்டம் என்றால் சரியல்ல, மறைமாவட்டத்தின் அமைப்பு விதியாகும். மேற்படி ஆவணம் பிவாசாஆ. **2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பிவாசாஆ. 2 ஆவணத்தின் அடிப்படையில் தான் ஆலயங்களின் நிர்வாகம் மற்றும் செயல்பாடுகள் நடைபெறும் என்றால் சரிதான். கத்தோலிக்க திருச்சபையில் 7 திருவருட்சாதனங்கள் உண்டு என்றாலும் அதில் ஒன்று தான் திருமுழுக்கு என்றாலும் சரிதான். பங்கு குரு என்பவர் திருச்சபை சட்டப்படி பங்கிற்கு மறைமாவட்ட ஆயரால் நியமிக்கப்பட்ட மத போதகர் என்றால் சரிதான், அவர் அபிஷேகம் செய்யப்பட்டவர்.

6. அந்த வகையில் 1ம் பிரதிவாதி 22.05.2016 அன்று கண்டன் விளை துாய குழந்தை இயேசு தெரசாள் ஆலயத்தில் பங்கு குருவாக நியமிக்கப்பட்டார் என்றால் சரிதான். சித்தன்தோப்பு துாய அலங்கார அன்னை ஆலயத்தின் பங்கு குருவும் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கண்டன் விளை பங்கு கோவிலில் பங்கு குருவாக நியமனம் செய்த நாள் முதல் அவர் பணிமாறுதல் பெற்று சென்ற நாள் வரை நான் வழக்கில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டு தவிர வேறு குற்றச்சாட்டு இல்லையென்றால் சரியல்ல, வேறு குற்றச்சாட்டுகளும் உள்ளது.

7. வேறு குற்றச்சாட்டுகள் இருப்பதை என்னால் நீதிமன்றத்தில் நிரூபிக்க முடியாது என்றால்தேவைப்பட்டால் நிரூபணம் செய்யலாம். 1ம் பிரதிவாதி எனது ஆலயத்தில் பணிபுரிந்து வந்த போது காரங்காடு மறைவட்ட முதன்மை பணியாளராக பணி உயர்வு பெற்றார் என்றால் சரியல்ல, பொறுப்பு பதவி வகித்தார். நான் பொறுப்பு பதவி வகித்தார் என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம்

பிரதிவாதி தற்போதும் மேற்படி பதவியில் தான் பணி செய்து வருகிறார் என்றால் சரிதான், தற்போது நிரந்தரமாக்கப்பட்டுள்ளார்.

8. என்னுடைய மகனின் மனைவியின் பெயர் என்ன என்றால் அபிசா கிரேஸ் ஆகும். அபிசா கிரேஸ் பாரம்பரியமான கத்தோலிக்க திருச்சபையை சார்ந்தவர் அல்ல என்றால் சரிதான், அவர் CSI சபையை சார்ந்தவர். என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 7 பேர் ஆகும், அதில் தற்போது 4 நபர்கள் உயிருடன் உள்ளனர், அவர்களது பெயர் திரு. டி. லோப்பஸ், டி. லாரன்ஸ், டி . ஜார்ஜ் பெஞ்சமின் மற்றும் நான் ஆகும். என்னுடன் பிறந்தவர்களில் தற்போது ஊரில் யார் உள்ளார் என்றால் நான் மட்டும் தான் ஊரில் உள்ளேன். டி . ஜார்ஜ் பெஞ்சமின் மற்றும் டி. லாரன்ஸ்ம் ஊரில் தான் வசித்து வருகிறார்கள் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9. குமரி மாவட்டத்தில் பொதுவாக மக்கள் வெளியூரில் தான் வேலை செய்து வருகிறார்கள் என்றால் சரிதான், வேலைவாய்ப்பின் அடிப்படையில் வெளியூரில் வசித்து வருகிறார்கள். மேற்படியோர் விழா காலங்களில் சொந்த ஊர்களுக்கு வருவார்கள் என்றால் சரிதான், விழா காலங்களிலும் குடும்ப நிகழ்ச்சிகளிலும் வருவார்கள். இந்த வழக்கின் சம்பவங்கள் , குறித்து எனக்கு நேரடியாக தெரியும் என்றால் தெரியும். இந்த வழக்கின் வழக்குரை, எதிருரை, வழக்கறிவிப்பு மற்றும் பதில் அறிவிப்பு குறித்தும் எனக்கு நேரடியாக தெரியும் என்றால் நேரடியாக தெரியும் .

10. எனது வழக்குரையில் எனது உடன் பிறந்தவர்களில் யார் யார் வெளியூரில் அல்லது வெளி நாட்டில் வசித்து வருகிறார்கள் என்று குறிப்பிடவில்லையென்றால் சரிதான். திருமுழுக்கு நிகழ்வை விழாவாக நடத்த போவதாக எனது உறவினர்களுக்கு தெரிவித்ததை காட்டக்கூடிய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான், தொலைபேசி மூலமாக தெரிவித்தோம். திருமுழுக்கு என்பது கத்தோலிக்க திருச்சபையின் ஜென்ம பாவங்களிலிருந்து விடுபட செய்யப்படும் சடங்கு என்றால் சரிதான்.

11. திருமுழுக்கு சடங்கிற்கு பரிமள தைலம், வெள்ளை துணி, மெழுகு திரி, குவளையில் உள்ள தண்ணீர் முதலியன தேவையான பொருட்கள் என்றால் சரிதான் , அவை பொதுவாக குழந்தைகளுக்கு சர்ச்சிலிருந்து கொடுப்பது வழக்கம் தான். என்னுடைய வழக்குரையில் 02.11.2019 அன்று எனது மகனும் உறவினர்களும் சேர்ந்து பங்கு குருவிடம் திருமுழுக்கிற்கு நாள் குறிப்பிட சென்றோம் என்று குறி ப்பிட்டுள்ளேன் , யார் யார் உடன் சென்றார்கள் என்று குறிப்பாக சொல்லவில்லையென்றால் சரிதான், எனது மகனும் தாய் மாமனும் சென்றார்கள். எனது மகனும் தாய் மாமனும் சென்றார்கள் என்ற விவரத்தை தற்போது தான் முதன் முறையாக நீதிமன்றத்தில் உரைக்கிறேன் என்று சொன்னால் சரிதான்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 04.11.2025 தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல்